இன்றைய குடும்பங்களும் இதுபோன்ற நிச்சயமற்ற மற்றும் கவலையான தருணங்களை அனுபவிக்கின்றன. வாழ்க்கை எப்போதும் நமது திட்டங்களின்படி அமைவதில்லை. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம், அவர்களின் நம்பிக்கை வாழ்க்கை, பள்ளியில் அவர்கள் எதிர்நோக்கும் போராட்டங்கள் அல்லது வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் போன்றவற்றைப் பற்றிக் கவலைப்படலாம்.

சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகளை வளர்க்கும் குடும்பங்களுக்கு இது மிகவும் பொருந்தும். அவர்களின் வாழ்க்கையில் பெரும்பாலும் அசாதாரணமான பொறுமை, துணிவு மற்றும் அன்பு தேவைப்படுகிறது. அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் சிகிச்சைக்கு செல்வது, மருத்துவரை சந்திப்பது அல்லது குழந்தையுடன் கொண்டுள்ள அவர்களின் தொடர்புகளுக்கு ஆதரவு மற்றும் புதிய வழிகளைக் கற்றுக்கொள்வது போன்றவையும் அடங்கும். இதில் சோர்வும் பின்வரும் கேள்விகளும் அவர்களுக்கு எழலாம்; இந்தப் பயணம் ஏன் இவ்வளவு கடினமாக உள்ளது? என் குழந்தை எப்படி வளரும்? எனக்குப்பின் யார் இந்த குழந்தையைக் கவனித்துக்கொள்வார்கள்?

இருந்தபோதும், இந்தப் போராட்டங்களுக்கு மத்தியில் ஒரு அழகான விஷயம் பெரும்பாலும் வெளிப்படுகிறது. அதுவே ஒன்றித்து நடத்தல்- குடும்பமாக துணை நிற்கும்போது, குறிப்பாக பாதை கடினமாக இருக்கும்போது, ஒருவருக்கொருவர் பொறுமையுடன் உடன்நடப்பதாகும். அது, தங்கள் பிள்ளைக்காக அயராது பரிந்து பேசும் பெற்றோர்களையும், புரிதலுடன் பாதுகாப்பாகவும் இருக்கக் கற்றுக்கொள்ளும் உடன்பிறப்புகளையும், ஊக்கத்தையும் இறைவேண்டலையும் வழங்கும் தாத்தா பாட்டிகளையும் குறிக்கிறது.

இத்தகைய உண்மையுள்ள உடனிருப்பு, இயேசு நமக்குத் துணையாக இருப்பதைப் பிரதிபலிக்கிறது. வாழ்க்கை எப்போதும் எளிதாக இருக்கும் என்றோ அல்லது ஒவ்வொரு கேள்விக்கும் உடனடிப் பதில் கிடைக்கும் என்றோ இயேசு வாக்குறுதி அளிப்பதில்லை. மாறாக அவர் நம்முடன் இருப்பதாகவும், நம்மை வழிநடத்துவதாகவும் வாக்குறுதி அளிக்கிறார்.

இயேசு "நானே வழி" என்று சொல்லும்போது, பாதை தெளிவாகத் தெரியாதபோது, அவருடன் ஒவ்வொரு அடியாக நடந்துவர நம்மை அழைக்கிறார். "நானே உண்மை" என்று சொல்லும்போது, ஒவ்வொரு மனிதரும் கடவுளின் பார்வையில் விலைமதிப்பற்றவர் என்பதை நமக்கு நினைவூட்டுகின்றார். மேலும் அவர் "நானே வாழ்வு" என்று சொல்லும்போது, குடும்பங்களுக்குள் இருக்கும் அன்பு, பொறுமை மற்றும் இரக்கம் ஆகியவை நம் மத்தியில் செயல்படும் கடவுளின் வாழ்வின் அடையாளங்கள் என்று நமக்கு உறுதியளிக்கிறார்.

அன்புடன் ஒருவருக்கொருவர் துணையாக இருக்கும் குடும்பங்கள், கிறிஸ்துவின் வாழும் சான்றுகளாக மாறுகின்றன. இயேசுவைப் பின்பற்றுவது என்பது எல்லாவற்றுக்கும் பதில்களைக் கொண்டிருப்பது அல்ல; மாறாக அவரில் நம்பிக்கை வைப்பது, அன்பில் ஒன்றாக நடப்பதும் ஆகும் என்பதை அவை காட்டுகின்றன.

**இன்றைய இறைவார்த்தை:**

திருத்தூதர்பணிகள் 6:1-7
திருப்பாடல் 33: 1-2, 4-5, 18-19
1 பேதுரு 2: 4-9
யோவான் 14: 1-12

எந்த குடும்பமும் வானத்திலிருந்து முழுமையாக உருவாகி கீழே இறங்குவதில்லை. குடும்பங்கள் அன்பு செலுத்தும் திறனில் தொடர்ந்து வளர்ந்து முதிர்ச்சியடைய வேண்டும்.
– திருத்தந்தை பிரான்சிஸ் (அமோரிஸ் லெடிசியா – அன்பின் மகிழ்ச்சி 325)

INTERNAL CIRCULATION ONLY
BUL 18/2026
வெளியீடு: மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | Email: api@archkl.org

# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | பாஸ்கா காலம் ஐந்தாம் ஞாயிறு | 03 மே 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: குடும்பம் - ஒன்றித்து நடத்தல்

## கடவுள் மீது நம்பிக்கை வைத்து அன்பில் ஒன்றாக நடப்போம்.



இயேசு தனது பிரியாவிடை உரையை, தம்முடைய பிரிவால் கலக்கமும் குழப்பமும் அடைந்திருந்த தம் சீடர்களிடம் மென்மையாகப் பேசித் தொடங்குகிறார். இயேசு அவர்களிடம், "நீங்கள் உள்ளம் கலங்கவேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். பின்னர் மறைநூலில் உள்ள ஆற்றல்வாய்ந்த உறுதிமொழிகளில் ஒன்றை அவர்களுக்கு அளிக்கிறார். "வழியும் உண்மையும் வாழ்வும் நானே"

இயேசு கூறியதன் பொருளை சீடர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. தோமாவும் பிலிப்புவும் எதிர்காலம் அவர்களுக்கு நிச்சயமற்றதைப் போல் உணர்ந்ததால் கேள்விகளைக் கேட்டார்கள்.